செ.வெ.எண்.07 நாள்:03.05.2017

பத்திரிக்கை செய்தி ___ திருநெல்வேலி மாவட்டம்

## மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த வேலைக்கு செல்லும் ஏழைப் பெண்களுக்கு 50 சதவீத மானிய விலையில் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தில் 1 லட்சம் பெண்களுக்கு ஸ்கூட்டர் வழங்கப்படவுள்ளது.

## திருநெல்வேலியில் மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள் தகவல்.

---

திருநெல்வேலியில் மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.-

உலக செய்தியாளர்கள் தினத்தையொட்டி செய்தி விளம்பரத்துறை அமைச்சர் என்ற முறையில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்தியாளர் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தினார்கள்.கடந்த தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று புதிய சகாப்தத்தை கொண்டு வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதும் முக்கிய 5 கோப்புகளில் கையெழுத்திட்டு அவைகளை உடனடியாக செயல்படுத்தினார்கள். அதைப் போலவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.கே.எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் பதவியேற்ற உடனே வேலைக்குச் செல்லும் ஏழைப் பெண்களுக்கு 50 சதவீத மானியத்தில் பெட்ரோல் ஸ்கூட்டர், கர்பிணி பெண்களுக்கு மகப்பேறு உதவித் தொகை ரூ.12,000 லிருந்து 18,000 மாக உயர்வு, மீனவர்களுக்கு தனி வீட்டு வசதி திட்டம், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை இருமடங்காக உயர்வு, டாஸ்மாக் மூலம் நடத்தப்படும் மதுபானக் கடைகள் மேலும் 500 கடைகள் மூட ஆணை என 5 திட்டங்களுக்கு கையெழுத்திட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மக்கள் நலனில் அக்கறை கொண்டு பல திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி கருமேனி ஆறு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். அம்மாவின் அரசு அதை விரைவில் செயல்படுத்தும். உலக பத்திரிக்கையாளர்கள் தினத்தையொட்டி அரசின் சார்பில் நல்வாழ்த்துகளை தெரிவித்து விடை பெறுகிறேன் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மேயர் திருமதி. இ.புவனேஸ்வரி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திரு.கல்லூர் வேலாயுதம், மற்றும் செய்தியாளர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.